## மெதகம பிரதேச சபை

## மொனராகலை மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 29 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 27 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுன் 23 ஆந் திகதி சபைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மெதகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த சபைக்குச் சொந்தமான 9 காணித் துண்டுகளின் பெறுமதி மற்றும் 15 கட்டிடங்களின் பெறுமதி உட்பட கணக்கீடு செய்யப்படாத 76 காணித் துண்டுகளின் பெறுமதியை ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிற் தகைமை உடைய பெறுமதி மதிப்பீட்டாளரின் மூலம் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது உடைத்து அகற்றப்பட்ட பஸ் நிலையக் கட்டிடத்தின் பெறுமதியாகிய ரூபா 908,000 அசையும் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஏற்பாடுகள் செய்திருக்கவில்லை.

1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய உள்ளூராட்சி ஓய்வூதியம் ரூபா 216,685 தொயினைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

--------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 133,875,398 கூட்டுத்தொகையான 2 சொத்து விடயங்களை கணக்காய்வின் போது சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

--------------------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| | பிரிவு 19(1)(ை) | உள்ளூராட்சி ஆணையாளரின் எழுத்துமூல பூர்வாங்க அங்கீகாரம் இன்றி இரண்டு பதவிகளுக்காக இரண்டு நபர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 211,287 தொகை ஒன்று சம்பளம் மற்றும் படியாக சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| | நி.பி. 71 | 2014 நவம்பர் 12 திகதிய 25∴2014 கொண்ட பொது நிருவாக சுற்றிறிக்கைக்கு முரணாக சபையில் அமைய, பிரதியீட்டு அடிப்படையில் கடமையாற்றிய இயந்திர உதவியாளர், தொழில்நுட்ப உதவியாளர், காவலாளிகள் ஆகிய பதவிகளுக்கு ஊழியர்கள் 3 பேர் வெளியே நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தார்கள். |
| (இ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை | |
| | விதி இலக்கம் 177 மற்றும் 178 | சபைக்குச் சொந்தமான 4 ஆதனங்கள் மீளாய்வாண்டின் போது கேள்விகோரி வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

-----------------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை மிஞ்சிய வருமானம் ரூபா 5,579,414 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,521,335 தொகையாகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் தேறிய குறைவு ரூபா 2,941,921 ஆக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

----------------------------------

2.2.1 நிலுவை வருமானம்

-----------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 1,959,145 தொகைக்கான நிலுவை வருமானத்தை அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.2 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 1,045,503 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 400,949 தொகை அறவீடு செய்ய வேண்டியிருந்தது.

2.2.3 வீத வரி

------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 138(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் வீத வரிகள் 5 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

--------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மின் சக்தி அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 திகதிய கடிதத்தின் 2(1) பிரிவின் பிரகாரம் வீதி விளக்குகள் செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தலுக்கான கட்டணம் செலுத்தும் அடிப்படையில் உள்ளூராட்சி நிறுவனங்கள், வீதி விளக்குகளை செயற்படுத்தல் மற்றும் பராமரித்தலுக்காக சேவை வழங்குனர் ஒருவராகக் கடமையாற்ற வேண்டும். எனினும், அவ்வாறு மேற்கொள்ளாமல்

மீளாய்வாண்டின் போது இதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 117,350 செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 2004 ஜூன் 25 திகதி சபையினால் நிர்மாண வேலைக் கொடுப்பனவுகளுக்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த மக்கள் வங்கியின் மெதகம கிளையின் கணக்கு இலக்கம் 258100190000008 கொண்ட கணக்கின் கொடுக்கல் வாங்கல்கள் விடயங்கள் மீளாய்வாண்டு ஜூலை 21 இன் பின்னர் நிறத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறிப்பிட்ட நடைமுறைக் கணக்கின் மீதியாகிய ரூபா 604,830 இது வரை விளைவற்று காணப்பட்டது.

(இ) 5 பதவிகள் தொடர்பாக பதவியணியை விட மிகையாக 8 பேர் மீளாய்வாண்டின் போது சேவையில் ஈடுபடுத்தி சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்தப்பட்டுள்ளன.

3.2 ஒப்பந்த நிருவாகம்

------------------------------

3.2.1 தகனசாலை நிர்மாணித்தல்

------------------------------------------------

தகனசாலை நிர்மாணிப்பதற்காக கட்டம் ஐ மற்றும் ஐஐ இன் கீழ் முறையே ரூபா 9,529,981 தொகை மற்றும் ரூபா 12,096,251 தொகை ஆக இரண்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு 2014 அக்டோபர் 30 திகதி ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்த உடன்படிக்கை இரண்டின் கீழ் ரூபா 7,650,460 மற்றும் ரூபா 9,653,723 உடன்படிக்கை தொகைக்கு சாட்டப்பட்டிருந்தது. 2015 ஜனவரி 30 திகதிக்கு முன்னர் வேலை பூர்த்தி செய்ய வேண்டும். எனினும் 2016 மே 12 திகதி வரை அவ் வேலைப் பகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

3.2.2 மெதகம மாநாட்டு மண்டபம் நிர்மாணித்தல்

--------------------------------------------------------------------

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாடுகளின் மீது மெதகம மாநாட்டு மண்டபம் நிர்மாணிப்பதற்காக கட்டம் ஐ, ஐஐ மற்றும் ஐஐஐ இன் கீழ் ரூபா 24,477,004 பெறுமதியான மூன்று மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு 2014 ஆண்டின் போது ரூபா 23,538,084 தொகை பெறுமதிக்கு மூன்று உடன்படிக்கைகளின் கீழ் ஒப்பந்த வேலை சாட்டப்பட்டு ஒப்பந்தக்காரருக்கு ரூபா 10,149,852 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. 2016 மே 12 திகதி அளவில் ஒப்பந்த உடன்படிக்கை காலம் 18 மாதங்களை மிகைத்திருந்த போதிலும் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------------

மீளாய்வாண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் மூலம் மதிப்பீட்டு வருமானம், செலவுகள் மற்றும் ஆண்டிற்கான உள்ளவாறான வருமானம், செலவுகள் இடையே காணப்படும் முக்கியமான முரண்களின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவுகளின் கட்டுப்பாட்டில் பாதீடு ஆக்க பூர்வமான கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 சுற்றாடல் சார் மற்றும் சமூகப் பொறுப்பினை நிறைவேற்றாமை

---

அனைத்து அரச நிறுவனங்களும் தனது தூரநோக்கு மற்றும் பணியை நிறைவேற்றும் போது அந்த நிறுவனத்திற்கு பொருத்தமான சுற்றாடல் சார் மற்றும் சமூக பொறுப்பினை இனங்கண்டு அவற்றை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டிய போதிலும் சபையினால் அவர்களின் சுற்றாடல் சார் சமூகப் பொறுப்புக்களை இனங்காண்பதற்கான நடைமுறை ஒன்றினை தயாரித்து செயற்படுத்தியிருக்கவில்லை.

4.3 வருடாந்த பெறுகைகள் திட்டம்

---

சபையினால் மீளாய்வாண்டிற்கான வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.4 உள்ளகக் கணக்காய்வு

---

மாகாண சபையின் உள்ளகக் கணக்காய்வு அலகின் மூலம் போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

---

2009 ஜுன் 09 திகதிய முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் னுஆயு.\.2009(1) இலக்கங் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டல் சுற்று நிருபத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைப்பதற்காக மீளாய்வாண்டு வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்